# குறிஞ்சிப்பாடியில் மாநாடு கூடினர்-மகிழ்ந்தனர்!

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1] சென்னை (14—3—50) வெளியூர் (15—3—50) [ இதழ் 193

## ஊரெங்கும் உணர்ச்சி வெள்ளப்பெருக்கு

### அலங்காரப் பந்தலில் ஆர்வமுள்ள மக்கள் ஆயிரக்கணக்கில் கூடிய காட்சி

—————(0)—————

### கழகத் தலைவர்களின் கருத்துமிக்க சொற்பொழிவுகள்

### குறிஞ்சிப்பாடி மாநாட்டு நிகழ்ச்சி விவரம்

குறிஞ்சிப்பாடி, மார்ச். 12—

தோரணங்களாலும், பலவித வேலைபாடுகளாலும் அழகு செய்யப்பட்டிருந்த 'திருவள்ளுவர் பந்தலில்' தென்ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு இன்று காலையில் துவக்கப்பட்டது. மாநாட்டின் காரணமாக இப்பேரூரின் வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு ஒரு பூங்கா போன்று விளங்கியது. தெருக்களில் நீர்த் தெளித்து, அழகிய கோலங்கள் நெடுக இடப்பட்டிருந்தன. குறிஞ்சி நோக்கி மக்கள் நேற்று மாலையிலிருந்தே திரள்திரளாக வர ஆரம்பித்துவிட்டனர். திருவிழாக்களுக்கு மட்டுமே கூட்டம் கூடுமென்ற எண்ணமுள்ள மக்கள், மாநாடு செல்வோரை நோக்கி எங்கு "செல்கிறீர்கள், குறிஞ்சிப்பாடியில் ஏதாவது தேர்த் திருவிழாவா?" என்று வினவ ஆரம்பித்தனர். மணி 9 ஆவதற்குள் மாநாட்டிற்கென விடப்பட்ட தனி ரயில் மூலமாகவும், பஸ்மூலமாகவும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து 10000-க்கு மேற்பட்ட மக்கள் வந்து குழுமிவிட்டார்கள். பந்தலுக்கு வெளியிலும் பந்தலுக்குச் செல்லும் வீதியிலும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களை வரவேற்று வாழ்த்தொலித் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. தோழர் அண்ணாத்துரையும் மற்ற தலைவர்களும் 10 மணிக்கு மாநாட்டுப் பந்தலில் நுழைந்தபோது பந்தல் அதிரும்படியாக "அறிஞர் அண்ணா வாழ்க" என்ற வாழ்த்தொலி எழும்பியது. இட நெருக்கடி காரணமாக ஒருவரையொருவர் தழுவிக்கொண்டிருந்த மக்களின் ஆர்வப் பெருக்கம் 'திராவிட நாடு கிடைத்துவிட்டது; அதில்தான் நாம் வாழ்கிறோம்' என்று எண்ணும்படி செய்தது. குறிஞ்சிப்பாடியின் தனிச்சிறப்பு மாநாட்டுக்கு வந்திருந்த பெரும்பாலோர் திராவிட நாட்டின் வருங்காலத்தை வகுக்க ஆவல் பெற்றிருந்த இளைஞர் கூட்டம். வெளியூரிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் வந்த தாய்மார்களும் பந்தலின் பெரும் பகுதியில் உட்கார்ந்துகொண்டு, மாநாட்டுக்கு ஒரு தனி அழகையளித்தனர்.

மாநாடு துவக்கப்பட்டபோது மேடையில் தோழர்கள் அண்ணாத்துரை, அன்பழகன், சேலம் சித்தையன், போளூர் சுப்ரமணியம், பொன்மலை பராங்குசம், திருச்சி சாம்பு, பட்டுக்கோட்டை சௌரிராசன், ஈ. வெ. கி. சம்பத், விருத்தாசலம் ராமனுசாமி அரங்கண்ணல் ஆகியவர்கள் அமர்ந்திருந்தார்கள். மாநாட்டுத் தலைவர் தோழர் இரா நெடுஞ்செழியன் தோழர்கள் மதியழகன், என். வி. நடராசன் சென்னை கார்ப்பரேஷன் கவுன்சிலர் வி. முனுசாமி, ஈழத்தடிகள் ஆகியோர் ரயில் கால தாமதத்தின் காரணமாக ஒருமணி நேரம் தாமதமாக வந்தார்கள்.

திராவிட நாட்டுச் சிறப்புப் பாடல்களுடன் மாநாடு ஆரம்பமாயிற்று. தோழர் ஈ. வெ. கி. சம்பத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிறப்பையும், கொடியின் சிறப்பையும், கட்சியின் லட்சியத்தையும் விளக்கிப் பேசி கொடியை ஏற்றுவித்தார்.

அடுத்துத் தோழர் க. அன்பழகன், தோழர்கள் இரா.

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க)

## முதலாளிகள் மனித சக்தியை அலட்சியப்படுத்தலாகாது

### மனிதன் வெறும் இயந்திரமல்ல

—————(0)—————

### உற்பத்தி, லாபம், நஷ்டம் அனைத்துக்கும் அடிப்படை மனிதசக்தியே

————( 0 )————

### முதலாளிகட்குப் பண்டித நேருவின் அறிவுரை

"இன்றைய நிலையில் ஒரு அரசாங்கம், நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முடியாதென்று சொல்லிவிட முடியாது. வேலையில்லாத்திண்டாட்டத்தை அறவே ஒழிக்க அரசாங்கத்தால் முடியாவிட்டாலும். ஒழிக்க வேண்டிய பொறுப்பை அது ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்."

என்று அண்மையில் டில்லியில் கூடிய இந்திய வர்த்தகத். தொழில் முதலாளிகள் மாநாட்டில் பேசுகையில் இந்தியப் பிரதமர்பண்டித நேரு குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

"முதலாளிகளாகிய நீங்கள் உங்களுடைய திட்டங்களில் மனித வாழ்க்கையின் அவசியத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதனை நீங்கள் அலட்சியப்படுத்தக்கூடாது. பொருளாதஉற்பத்தி செய்யும் மனித சக்தியை, வெறும் உயிரற்ற இயந்திரமாகக் கருதிவிடக்கூடாது. ஒருபுறம் தேவைக்கான பண்டங்களை உற்பத்தி செய்வதும், அதன் மூலம் உங்களுக்கு லாபம் நஷ்டம் முதலியவற்றைத் தேடித் தரவல்லதும் அந்த மனித சக்தியே.

தசையும் இரத்தமும் கூடிய உடலமைப்பு மாத்திரமே மனிதவர்க்கம் என்றுஎண்ணிவிடக்கூடாது. மனிதனுக்கு அறிவு இருக்கிறது. ஆசையிருக்கிறது. அந்த அறிவும் ஆசையும் மகத்தான சக்தி வாய்ந்தவை. எனவே, அத்தகைய மனித சக்தியின் மாண்பை உணர்ந்து நடக்கவேண்டியது உங்கள் கடன்." என்றும் கூறினர்.

### எந்த மழையிலும் இடியாத சுவர்கள்

லண்டன், மார்ச். 13—

காப்கரி கழிவுப் பொருள்களையும், ஸிமெண்டையும் ஒன்றாகக் கலந்து வேகவைக்கப்படும் செங்கற்கள் மிக மிக உறுதியாக இருக்கிறதென்றும், இவைகளால் கட்டப்படும் வீடுகள் மிக உறுதியாகவும் எம்மோர்ப்பட்ட மழையிலும் இடிந்து விழாததாகவும் இருக்கிறதென் அகூறப்படுகிறது.

இதை உற்பத்தி செய்வதற்கான புது இயந்திரம் ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

### டான்ஸில் ஆபரேஷன் அவசியமில்லை

லண்டன், மார்ச். 13—

சில டாக்டர்கள் நினைப்பது போல் டான்ஸில்களை (தொண்டையில் சதை வளருவது) ஆபரேஷன் செய்யவேண்டுவது அவ்வளவு அவசியமில்லை என்று ஹெர்ட்போர்ட்ஷயரைச் சேர்ந்த சில டாக்டர்கள் கருதுகின்றனர்.

இந்த டான்ஸில் ஆபரேஷன் காலதாமதமானதால், மாணவர்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டதாக ஹெர்ட்போர்ட்டியர் பள்ளிக்கூட ரிப்போர்ட் கூறுவதாக அவர்கள் கூறினர். அநேக மாணவர்களுக்கு ஆபரேஷன் செய்யாமலேயே டான்ஸில் குணமாகிவிடுகிறதாம்.

———

### அரபு மன்னர்கள் கூடிப் பேசலாம்

டமாஸ்கஸ், மார்ச். 13—

அரபு லீக் கௌன்ஸிலில் கூடி ஆலோசிக்கப்போகும் விஷயத்தில், ஏதாவது அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டால் அவைகளைத் தீர்க்க அரபு நாடுகளின் மன்னர்கள் ஒன்று கூடிப் பேசலாம் என்று அரபு லீக் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

### சீனாவில் அந்நிய ஆதிக்கம் கூடாது

கோலாலம்பூர், மார்ச். 13—

சீனா எந்த அந்நிய நாட்டின் ஆதிக்கத்தின்கீழ் வரக்கூடாது. சீனாவில் எந்த அரசியல் கட்சியாவது மக்களின் ஆதரவைப் பூர்ணமாகப் பெற வேண்டுமானால், அது அயல்நாட்டு ஆதிக்கத்தை அடியோடு எதிர்க்க வேண்டும் என்று, மலேயாவில் முன்னாள் சீன கான்ஸல்ஜெனரலாக இருந்த லியின் என்பவர் தனக்களிக்கப்பட்ட விருந்தில் பேசுகையில் கூறினார்.

இவர் சீக்கிரமே போர்மோஸாவுக்குப் புறப்படவிருக்கிறார்.

## பண்டித நேரு ஆபத்தை உணரவில்லையாம்

### சீனக் கம்யூனிசத்தை எதிர்க்க வேண்டுமாம்!

—————( 0 )—————

### அமெரிக்கப் பத்திரிகை தூபம் போடுகிறது

நியூயார்க், மார்ச். 13—

சீனாவைக் கம்யூனிஸம் விழுங்கி வரும்போது அந்த ஆபத்தைச் சிறிதும் இந்தியாவோ பாகிஸ்தானோ உணரவில்லை என்றும், ஆசியா விஷயத்தில் அமெரிக்கா பொறுமையை இழக்கிறதென்றும் இவ்விஷயம் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை என்ருலும் உண்மை இதுதான் என்றும் அமெரிக்கப் பத்திரிகை 'நியூஸ் வீக்' எழுதுகிறது.

அப்பத்திரிகை மேலும் எழுதுவதாவது:—

ஆசியாவைக் காப்பாற்றுவதில் இந்தியாவும் பாகிஸ்தானும் விசேஷ சிரத்தை காட்டவேண்டும். ஒருவருக்கொருவர்சண்டை யிட்டுக்கொண்டிருந்தால் ஆசியாவைக் காப்பாற்றுவது சாத்யமற்ற காரியமாகிவிடும்.

ஏதாவது குறை கூறினால் அதைப் பண்டித நேரு எப்படி எடுத்துக் கொள்கிறார் என்பது தெரியும். அவர் மிரட்டல் போரில் எந்தக் கட்சியுடனும் தன் நாட்டை ஈடுபடுத்தக் கூடாது என்று விரும்புகிறார். 19வது நூற்றாண்டு கொள்கையில் பலனில்லை என்று அமெரிக்கா கருதுகிறது. இப்பொழுது ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுக்க அவர் வழி செய்யவேண்டும். —குளோப்,

## ஆஸ்திரேலியாவில் கம்யூனிசம் தலைகாட்டுகிறது

### நிலைமையைச் சமாளிக்க சர்க்கார் திட்டம் போடுகிறது

பிரிஸ்பேன், மார்ச். 13—

தொழிற் சங்கங்களின் முக்கிய பதவிகளில் கம்யூனிஸ்டுகள் இருக்கக் கூடாதென்று, ஆஸ்திரேலிய சர்க்கார் தடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக, எல்லாத் துறைகளிலும் முக்கியமாக நிலக்கரிச் சுரங்கங்களில் ஸ்டிரைக்கைகம்யூனிஸ்டுகள் தூண்டிவிடலாமென்று பிரதமர் மென்ஸிஸ் எதிர்பார்க்கிறார்.

நிலக்கரிச் சுரங்க ஸ்டிரைக் ஏற்பட்டால், அதனால் நாடு பாதிக்காமலிருப்பதற்காக பிரிட்டனிலிருந்து நிலக்கரிவரவழைக்க ஆஸ்திரேலியசர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்

மாலை மணி

சென்னை 14—3—50 செவ்வாய்க்கிழமை

# வஞ்சகம் வெற்றி பெறுகிறது!

உலக வழக்கு அழிந்தொழிந்து சிதைந்து செய்து போன சமஸ்கிருத மொழியைத் தூக்கி நிறுத்தி, அதற்கு உயிர் ஊட்டும் முயற்சியில், ஆதிக்க வகுப்பினர் அல்லும் பகலும் இடையருது ஈடுபட்டு வருகின்றனர். அதில் ஓரளவுக்கு வெற்றியும் பெற்றுவிட்டனர்.

இந்திய துணைக்கண்டத்தில் வதியும் ஆதிக்க வகுப்பினர் சமஸ்கிருதத்தைத் தம் சொந்த மொழியாகக் கொண்டு, அதனை உயிர்ப்பிப்பதிலே எவ்வளவு அக்கரை காட்ட முடியுமோ, அவ்வளவு அக்கரையும் காட்டி, அதற்காக எவ்வளவு பாடுபட வேண்டுமோ, அவ்வளவும் பாடுபட்டு வருகின்றனர். ஆதிக்க வகுப்பினர் காட்டுகின்ற அக்கரைக்கும்; படுகின்ற பாட்டிற்கும் மாவது ஊர்த்தமிழுக்க முடியும்; ஆனால் திராவிடக்குழு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு விளங்கும் முண்டங்கள் சில, அவர்கள் எடுபிடிகளாக இருந்து, இறந்த—பயன்தராத—வாழ்வைப் பாழ்படுத்தும்பழைமைக்கொள்கைகளை மட்டுமே கொண்டுள்ள-பல நூற்றுண்டுகளுக்குப்பின்னுல் மக்களைப் பின்னேக்கி இழுத்துச் செல்லக்கூடிய சமஸ்கிருதத்திற்கு ஏற்றமளிக்கப்பாடுபடுகின்றனர் என்ருல், இவர்களைப்பற்றி என்ன எண்ணுவது? குலத்தைக் கெடுக்க வாதக் கோடறிக் காம்புகள் என்றுதானே சொல்வர், தெளிவறிவுடையோர்!

சமஸ்கிருதம் திராவிடத்திற்குத் தேவையற்ற மொழி-மேலும் அது திராவிடத்தைத் தாழ்வு படுத்தியமொழி, அந்த வேண்டாத — பாழ்பட்ட கற்பனைக் கருத்துக்களைக்கூறும் அந்த சமஸ்கிருதத்தை, இன்பத் தமிழகம் பன்னெடுங்காலமாக ஏற்றுக்கொள்ளாமல், எற்றி உதைத்துத் தள்ளி வைத்தேவந்துள்ளது. அப்பேர்பட்ட சமஸ்கிருதம் ஆதிக்க வகுப்பாரின்—அதாவது வடபாலிருந்து வந்த வகுப்பாரின் சொந்தமொழி என்ற ஒரே காரணத்துக்காக, எவ்வெவ் வகைகளிலெல்லாம் அந்த மொழிக்கு ஏற்றம் அளித்துக் காப்பாற்றி வைத்து, வாழச் செய்ய முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் பாடுபட ஆதிக்க வகுப்பினரும், அவ ரிட்டதையெல்லாம் சட்டமெனக் கொண்டு பணியாற்றி வரும் பிறமொழி எடுபிடிகளும் முயலுகின்றனர்.

ஆதிக்க வகுப்பினரின் ஆதிக்கம் நிறைந்த காங்கிரஸ் நாடாளத் தொடங்கி விட்டதால் ஆதிக்க வகுப்பினர் அந்தக் காலத்தில் கண்ட "இராம ராஜ்யம்" இப்பொழுது நடைமுறைக் காட்சியாகக் காட்டப்படுகிறது. அதன் விளைவுகளிலே ஒன்றுதான், சமஸ்கிருதத்திற்கு ஆதிக்கமும், உயர்வும், பெருமையும், கவனிப்பும் வளர்ச்சியும் தரப்படுவதாகும்.

சமஸ்கிருதத்தின் சேர்க்கையால் தமிழருக்கு—தமிழர்களுக்குக் கேடுகள் உண்டாயினவேயல்லாமல், இம்மியளவு நன்மையும்ஏற்பட்டதில்லை. ஏற்பட்டதெல்லாம் கேடுகளே! இப்படிப்பட்ட சமஸ்கிருத மொழியை மேலும் வளர்த்து, மேலும் கேடுகளை உண்டாக்கி, அதன் மூலம் தமிழ் போன்ற இனிய மொழிகளை அழித்து, அந்த அழிவைக்கண்டு ஆனந்தப்பட ஆதிக்க வகுப்பினர் முயலுகின்றனர். அவர்கள் திராவிடத்தில் — தமிழகத்தில் எங்கு எங்கு கூடுகிறார்களோ அங்கெல்லாம் "சமஸ்கிருதத்தின் மேன்மை", "சமஸ்கிருதத்தின்" அவசியம், "சமஸ்கிருதம் இந்தியாவின் மொழியாக வேண்டியதன்முக்கியத்துவம்" 'சமஸ்கிருதமும் மனித வாழ்வும்" இப்படிப்பட்ட தலைப்புகளில் பேசித்திரிகின்றனர். அவைகளை ஆதிக்க வகுப்பாரின் ஏடுகள் பத்திபத்தியாய் வெளியிடுகின்றன. இறந்த சமஸ்கிருதம் எப்படியேனும் உயிர்பெற்று எழுந்துவிட வேண்டும் என்ற கருத்துடன். மத்திய—மாகாண அரசாங்கங்கள், ஆதிக்க வகுப்பாரின் இடைவிடாத் தூண்டுதலின் பேரில், சமஸ்கிருதத்தின் எவ்வளவு உதவிகள் செய்து அதனைப்பிழைக்க வைக்க முடியுமோ, அவ்வளவு உதவிகளையும் செய்து வருகின்றன. இதை நன்கு அறிந்துகொண்ட காரணத்தால்தான் தோழர் சி. இராசகோபாலாச்சாரியார், இப்பொழுது சென்னையில் நடைபெற்ற சமஸ்கிருத பண்டிதர் மாநாட்டில்பேசும்போது, **'சமஸ்கிருதம் மீண்டும் பழைய உச்சநிலையை அடைந்துவிடும் என்பது திண்ணம். இதை நம்புங்கள். நான் சொல்வது நிறைவேறத்தான் போகிறது-நிறை வேறித்தான் தீரும்."** என்னும் கருத்துப்பட பேசியுள்ளார்.

**'நமது வாழ்வின்பத்திற்கு சமஸ்கிருத மொழியறிவு மிகவும் முக்கியமாகும்'** என்று மேலும் போதனை புரிகிருர். ஆதிக்க வகுப்பாரின் குல்லுகப் பட்டர். இலக்கியச் செல்வங்கள், இயற்கையோடு ஒட்டிய வகையில், காலத்திற்கும் கருத்துக்கும் பொருந்தக் கூடியமுறையில் எவ்வளவோ தமிழில் இருக்கும்போது தமிழர்கள், திராவிடர்கள் சமஸ்கிருதத்தைத் தேடியலைய வேண்டிய அவசியம் இல்லையே! சமஸ்கிருதம் வாழ்விற்கு ஒட்டிவராத கற்பனை ஆபாசக்கதைகள் நிரம்பிய நூல்களை ஏராளமாகக் கொண்டிருக்கிறது. அத்தகைய தேவையில்லா—வேண்டாத — பாழ்படுத்தும் நூல்கள் நல்ல தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட காரணத்தினுல்தானே, தமிழகம் இந்த அளவு தாழ்ந்த நிலைக்கு வரநேர்ந்தது. சமஸ்கிருதத்தை ஒதுக்கத் தலைப்பட்டு தமிழைப்பேணிவளர்க்க விரும்பிய பிறகு தானே தமிழர்கள்—திராவிடர்கள் மீண்டும் எழுச்சி பெறலாயினர். இந்நிலையில் பழைய நூற்றுண்டுகள் காலத்துக் கற்பனை வாழ்வுக்கு மக்களை இழுத்துச் செல்லும் சமஸ்கிருதம் திராவிடத்தில் ஏன் பரப்பப்படவேண்டும்? ஆதிக்க வகுப்பினரின் ஆதிக்கம் அதன் மூலம் தொடர்ந்து நிலை நிறுத்தப்படவேண்டும் என்பதல்லாமல் வேறு என்ன காரணம்?

இன்றைய உலகியல்—சமுதாய நல்வாழ்வுக்கு சமஸ்கிருதம் எவ்வகையில் திராவிடத்தைப் பொறுத்த வரையில் பயன் தருவதொன்ருகக் கூறித முடியும், தாய் மொழியாகிய தமிழும், காலத்திற்கேற்ற இலக்கியச் செல்வங்களை எல்லா மொழிகளிலிருந்தும் திரட்டித் தருகின்ற ஆங்கிலமும் போதுமே! சமஸ்கிருதம் எவ்வகையிலும் தேவையில்லையே! அது கேட்டின் அறிகுறியாக இருக்குமேயல்லாமல், நல்வாழ்வு தரும் ஆதாரமாக ஒரு நாளும் இராதே! அப்படிப்பட்ட செத்த—தீநாற்றம் பிடித்த சமஸ்கிருதத்தைப்பரப்ப ஆச்சாரியார் அடிகோலுகிருர், அதற்கு எடுபிடி ஆளாக மந்திரி மாதவமேனன் கச்சை வரிந்துகட்டி நிற்கிருர்.

தமிழையும், தமிழிலுள்ள இலக்கியச் செல்வங்களையும் அறியவோ, அறிந்து பயன் பெற வேண்டுமென்ற எண்ணமோ, ஆதிக்க வகுப்பினரிடத்தில் கிஞ்சிற்றேனும் இருப்பதில்லை! இந்த நிலையில் சமஸ்கிருதத்தின் இலக்கியச் செல்வங்களை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டுமாம்! எப்படி இருக்கிறது சமஸ்கிருதத்திற்கு ஒப்பாரி வைக்கும் அன்பர்களின் கூற்று!

**'வேற்று மொழியின் சேர்க்கைப் பயிற்சியால், சமஸ்கிருதத்தினுடைய இலக்கிய அமைப்புமுறைகளும், உச்சரிப்பு முறையும் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."**

என்று ஆச்சாரியார், சமஸ்கிருதப் பண்டிதர்களைப் பார்த்து, அவர்கள் மாநாட்டிலே கூறுகிருர். "வேற்று மொழிச் சேர்க்கையால் மொழியைக் கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று சமஸ்கிருதத்தைப் பொறுத்துக் கூறும் அந்த அறிவுரையைத் தமிழைப் பொறுத்துக் கூறும்போது ஆச்சாரியாரும் அவர் அடிப்பொடி ஆழ்வார்களும் ஏனோ, மறந்துவிடுகின்றனர்? தமிழோடு பிற மொழி சேர்ந்தால் வளரும் என்று கூறுகின்றனரே, எப்படி? சமஸ்கிருதச் சேர்க்கையால் தமிழின் இலக்கிய அமைப்புகளும், சொல் உச்சரிப்புகளும் எவ்வளவோ கெட்டிருக்கின்றனவே! இதைப் பற்றிக் கவலைப்படவில்லை, ஆச்சாரியார், ஆனுல் சமஸ்கிருதத்தைப் பற்றி மட்டும் அவ்வளவு கவலை கொள்கிருர்! ஏனோ இந்த வஞ்சகம்!

சமஸ்கிருதத்தை வடமொழி என்று கூறுவது கூடாதாம்; பிடிக்கவில்லையாம் மந்திரி மாதவமேனனுக்கு! அப்படிக் கூறுவது பைத்யக்காரத்தனமாம்! தென்மொழி—வடமொழி வேறுபாடுகளையும், வடமொழி தென்மொழியைச் சிதைத்த வரலாறுகளையும் நன்கு உணர்ந்தவர்கள் அறிவார்கள், சமஸ்கிருதத்தை வடமொழி என்று கூறுபவர்கள் பைத்யக்காரர்களா அல்லது அப்படிக்கூறுவதுகூடாது தவறு என்பவர் பைத்யக்காரரா, என்பதை! எப்படியோசெத்தமொழி பிழைக்க வைக்கப்படுகிறது, ஆதிக்க வகுப்பினராலும். அவர் சொல்கேட்டு ஏமாந்த எடுபிடிகளாலும்!

சமஸ்கிருதம் பரவுகிறது என்ருல் பாழ்படுத்தும் வைதிகம் படையெடுக்கிறது; வஞ்சகம் வெற்றி பெறுகிறது என்பது பொருள்! இன்னும் எத்துணை நாட்களுக்கு திராவிடர்கள் ஏமாளிகளாக வாழப் போகிருர்களோ!

# அணுசக்தி மூலம் மின்சார உற்பத்தி

## பதினைந்து ஆண்டுகளில் பலன் காணலாம்

### பிரிட்டிஷ் விஞ்ஞானியின் கருத்து

லண்டன், மார்ச். 13 -

இன்னும் 15 ஆண்டுகளுக்குள் அணுசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்தி பிரிட்டனிலுள்ள வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும், கிடைக்கும்என்று உலக பிரபல அணுசக்தி ஆராய்ச்சியாளரும் விஞ்ஞானியுமான பேராசிரியர் ஒலிம்பாண்ட் லண்டனில் பேசுகையில் கூறினுர்.

இன்னும் சில வருடங்களில் நிலக்கரி எதற்குமே உபயோகிக்க அவசியமில்லாது போகும் என்றும், பெரிய நகரங்களில் கரிப்புகை ஏற்படாதுபோகும் என்றும், இதன் மூலம் மக்கள் அந்த வாயுவை, சுவாசித்து ஆரோக்யமாக இருக்க முடியும் என்றும் அவர் கூறினுர்

இதர சக்திகளால் உற்பத்தி செய்யும் மின்சாரத்தைவிட, அணுசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்திக்கு அதிகமாகக் கட்டணம் செலுத்தவேண்டியிருக்காது என்றும் அவர் கூறினுர்.

### திருநெல்வேலிக்கு 100-டன்மைதாமாவு

*சென்னை, மார்ச்.—*

*திருநெல்வேலி ஜில்லாவிற்கு 100-டன் மைதாமாவு திருச்சி சேமிப்பில் வைத்துள்ள ஸ்டாக்கிலிருந்து அனுப்பும்படி திருச்சினுப்பள்ளி கலெக்டருக்கு சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர்.*

*விசாகப்பட்டணம் ஜில்லாவிற்கு 200-டன் ஸெமோலினு ரவையை சென்னை சேமிப்புஸ்டாக்கிலிருந்து அனுப்பி வைக்கும்படி சென்னை கலெக்டருக்கு சர்க்கார் உத்தரவு இட்டிருக்கின்றனர்.*

### மலேயாவுக்கு எஞ்ஜினியர் மாணவர்கள்

*கோலலம்பூர், மார்ச். 13—*

*மலேயாவின் மராமத்திலாகாவில் சேவைசெய்ய பயிற்சிபெற்ற எஞ்ஜினியர்கள் இல்லாததால், பிரிட்டனில் எஞ்ஜினியரிங் படிப்பில் தேர்ச்சிபெற்ற மாணவர்களைப் பிரிட்டன் அனுப்பிவைக்கவிருக்கிறது.*

*அம்மான், மார்ச். 13—*

*ஜார்டன் இதாலிய கூட்டுக் கம்பெனியான ஜார்டன் பாஸ்பேட் கம்பெனி சீக்கிரமே வேலையை ஆரம்பிக்கப் போகிறதென்றும், இதனுல் ஜார்டனிலிருந்து பாஸ்பேட் ஏற்றுமதி அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.*

### அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள்

#### மாநாடு கூட்டத் திட்டம்

*லண்டன், மார்ச். 13—*

*அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பு மந்திரிகள் ஒன்றுகூடி ஆலோசிப்பதன் விளைவாக, பிரிட்டிஷ் ஜெட்வேடி விமானங்களுக்கு அமெரிக்கா அதிக ஆர்டர் தருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*இந்த ஜெட் விமானங்கள் பாதுகாப்புக் காரியங்களுக்கு ஏற்றவை என்பதை அமெரிக்காவே ஒப்புக் கொண்டிருக்கிறது. இத்தகைய விமானங்களை அமெரிக்கா உற்பத்தி செய்யும்வரை பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கே ஆர்டர் கொடுக்கப்படுமாம்.*

*ஹேக்கில் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளின் பாதுகாப்பு மந்திரிகள் மாநாடு கூடுமுன், இராணுவக் கமிட்டிக் கூட்டம் ஒன்று நடைபெறும். அதில் மேற்கு ஐரோப்பா பாதுகாப்புக்கு ஒப்பந்த நாடுகள் ஒவ்வொன்றும் எவ்வளவு துருப்புகளைக் கொடுத்துதவ வேண்டுமென்பதைப் பற்றித் தீர்மானிக்கப்படுமாம். —ருேப்.*

### பாலுக்குப் பதில் வேறு பொருள்

*லண்டன், மார்ச். 13—*

*இந்தியாவில்லர்டீவின்முன்னுள் மெம்பரான தோழர் பிரையன் வார்ட் பெர்கின்ஸ் என்பவர், பாலுக்குப்பதில் உபயோகப்படக் கூடியபொருள் ஒன்றைப் பல நாள் ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடித்திருக்கிருர்.*

*இவர் கண்டு பிடித்துள்ள பால் குழந்தைகளுக்கு ஏற்றதாக இருக்கிறதென்று இந்தாலிய டாக்டர்கள்சோதித்துப்பார்த்துவிட்டு கூறியிருக்கின்றனர். இதை எங்கு வேண்டுமானுலும்தயாரிக்கலாமாம். ஜெர்மனியில் டார்ட்மெண்ட் என்ற இடத்தில் இப்பால் தயாரிக்கப்பட்டு புட்டிகளில் அனுப்பப்படுகிறது. இதை எப்படிச் செய்வது என்கிற விவரம் இந்தியா, யூகோஸ்லேவியா, கிரீஸ், தென்னுப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.*

### தேம்ஸில் மூழ்கிய பிரிட்டிஷ் சப்மெரின்

*லண்டன், மார்ச் 13—*

*தேம்ஸில் ஒரு ஸ்வீடிஷ் எண்ணைக் கப்பலுடன் மோதி மூழ்கிய டிரூலண்ட் என்கிற பிரிட்டிஷ் சப்மெரினை வெளியே எடுப்பதற்கான முயற்சிகள் இவ்வாரம் எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரிகிறது. இதற்காக கன்ட்ரோல் கமிஷன் இரு சால்வேஜ் கப்பல்களை அனுப்பியிருக்கிறது. —ருேப்*

### ஹைபா எண்ணெய் ஆலைகள் மூடப்படும்

*ஜெருசலம், மார்ச். 13—*

*ஹைபாவிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் இன்னும் சில நாட்களில் மூடப்படும் என்றும், இனி பெட்ரோல் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் என்று யூதபத்திரிகை செய்திகள் கூறுகின்றன.*

*இந்த ஆலைகளின் ஜெனரல் மானேஜரான ஹாய்கின்ஸ் ஆலைகளை அடியோடு மூடிவிடும் உத்தேசமில்லை என்று கூறுகிருர்.*

# அடிப்படை மாறினாலன்றி அவல வாழ்வு நீங்காது

## திராவிடத்தின் அடிமைநிலை எளிதில் தீரும் நோயல்ல

## புதுவாழ்வுபெற பொறுப்புணர்ச்சிதேவை

### குறிஞ்சிப்பாடி மாநாட்டுத் துவக்கவுரை

[ நேற்றையத் தொடர்ச்சி ]

தோழர்களே! உலக நாடுகள் பெரும்பாலானவற்றிலுஞ் சரி, இந்திய உபகண்டத்திலுஞ்சரி, இத் தென்னாட்டிலுஞ்சரி, பொது வாழ்வைப் பெரிதும் சூழ்ந்து நிற்கும் அரசியல் இயக்கங்களைப் பற்றவையனைத்தும் முடிவான லட்சியத்துக்கு அழைத்துச் செல்லும் முழுவல்லமையும், திட்டமும், திறனும் செயல் முறை வகையும் கொண்டவைகளல்லவென்பதை நீங்கள் மனதிலிருத்த வேண்டும். வேண்டுமானால், அவை ஒவ்வொன்றும் தம்முள் சகுதிக் கொண்டிருக்கலாம், தாமே லட்சிய எல்லைக்குப் பாதை போட்டு வருவதாக. ஆனால், அரசியல் இயக்கங்கள் பலவற்றிக்கும் அது இயலாத காரியமேயாகும். இன்று நாம் கேள்விப்படும் அரசியல் இயக்கங்கள் பலவற்றிலும் மக்களைப் பற்றி—நாட்டைப்பற்றிக் கவலைப்படாது, தங்களைப் பற்றியேக் கவலைப்படும் தன்னலத்தியாகிகள் நிறைந்து நிற்பதைக் காண்கிறோம். குறிப்பிட்ட பக்குவநிலை வரப்பெற்ற மக்கள் சமுதாயமொன்றிடையே தான் அரசியலியக்கமென்றால்—அதுவும், நாணயமான, யோக்கியமான அரசியலியக்கமென்றால் -- உண்மையான தொண்டு எதுவும் ஆற்ற முடியும். பிற்பட்ட மக்கள் கூட்டத்திடையே பிறக்கும் அரசியலியக்கமென்றால் பிறந்த இடத்துக்குத் தீமையளவும் நன்மையிராதென்பதோடு, அது நாளடைவில் பட்டானப் பேச்சு களிலறங்கி, என்னுடைய வேலைகளை மேற்கொண்டு, தன்னைத்தானே கெடுத்துக்கொண்டு மக்களிடையே அமைதியின்மையினையுண்டாக்கி—ன்; ஒழுக்கச் சீர்கேட்டையும் ஏற்படுத்தி வேண்டாத விரும்பாத-வெறுக்கத்தக்க நிலைமை மேற்படுத்தி விடுமென்ற ஒரு நிலை.

#### எண்ணிப் பாருங்கள்!

வாழ்க்கைத் துறை சொல்லவே—அனைவனைத்திலும் பிற்பட்டு நிற்கின்றது (திராவிடம்)—நாளுக்கு நாள் பிற்போக்கு சக்திகளுக்கே இரையாகி, மேலும் மேலும் அடிமைசாழ்த்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது இத்தென்னாடு, என்ற சம்பான உண்மையை யாரும் மறுக்க முடியாது. இதற்காக வெட்கப்படவும் வேண்டியதில்லை தென்னாட்டின் சீர்கேட்டை வெளிப்படையாகப் பேச மறுப்போர் அத்தனை பேரையும் இரகசியமாய்ச் சந்திப்போமானால், அவர்கள் உண்மையை ஏற்றுக்கொள்ள எத்தனையும் தயங்கார். ஆனால் அத்தகைய பிற்பட்ட தன்மைக்குக்காரணம் அந்நிய ஆட்சி நன்று நிலைபெற்றிருந்ததுமையே என்று கூறி மனவமைதி மழுப்பல் பேசிவிடுவேர். இக்காரணம் சொல்லும்போது காதுக்கு கேட்கும் போது சரியாகப்படலாம். ஆனால் இந்நாட்டுவரலாற்றை நாம் விஞ்ஞான ரீதியில் ஆராயப்புகுவோமானால் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடாமல், உண்மைநிலைத் தேடும் நிரத்துடன் உசவும் உறுதியுள்ளத்துடன் அடிப்படையிய முற்படுவோமானால், நம்மை நாமே கசப்பான கேள்வி யொன்றைக் கேட்கவேண்டிய நிலையே வந்தும்! அந்நிய ஆட்சிக்கு ஆட்பட வேண்டிய நிலை வந்ததற்குத்தேன்

இந்நாட்டுக்கு? இதுவே நக்கேள்வி அட்டல வில் காண்கிறோமே அடிக்கொரு நாம்; அவற்றைப் போலல்லவே; இந்நாடு! எத்தனை பெரிய மரத்த-விரிந்தநாடு! பழம் பெரும் கலாச்சாரத்தைப் பக்குவத்துடன் பெற்ற நாடு! நாகரிகத்துக்கே தாயகமாக விளங்கிய நாடு! இந்நாடு அந்நிய படையெடுப்புக்கு—ஆட்சிக்கு வளைந்து கொடுத்து-வீழ்ந்து பட்டதெனில், இதனை தற்செயலாக நிகழ்ந்த காரியமாகப் புனைந்துரைத்து விடமுடியாது. எனவே வீழ்ச்சியுற்ற நாட்டின் அமைப்பில்—அதன் பழைய வரலாற்றில் நாட்டஞ் செலுத்தி அவற்றை அனுசரித்தே காரணத்தைக் கண்டறிய வேண்டும். இந்நாட்டின் இப்போதைய பிற்போக்கு நிலைக்கு அன்னிய ஆட்சியே காரணமெனக் கொண்டாலும், அன்னியரின் அன்றைய படையெடுப்புக்கு இந்நாட்டின் அன்றைய பிற்போக்கு நிலையேதான் காரணமென்பது உயர்த்துணர்வுக்குமட்டுமன்றி, உண்மை வாதத்துக்கும் புலனாகிறது. அன்று இந்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்குமேயானால், தென்னாட்டு வரலாற்றில் முற்போக்கு சக்திகள் சுதந்தரமாய் நடமிட்டு நற்காரியங்களிலீடுபட வாய்ப்பு—வசதிகளிருந்திருக்குமேயானால், அந்நியர்களெனப்படுவோர் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பா லிருந்து வந்து இப்பரந்த நாட்டைக் கவர்ந்து கொண்டிருக்க முடியாது; ஆட்சியதிகாரத்தையும், அதிக்கபலத்தையும் நிலைநாட்டிக்கொண்டிருக்க முடியாது.

#### மேல் பூச்சால் பயனில்லை!

ஆகவே, தென்னாட்டின் பிற்பட்ட நிலை என்பது மேலெழுந்த வாரியான வியாதியல்ல; ஆணிவேர் அல்லிவேர் பாய்ந்த பெரும் வியாதியாகும். வேரைக் கல்லி வெட்டி யெறிந்தாலன்றி அது மறைமைமார்க்கமில்லை. இந்நாடு உண்மையான விடுதலை—முன்னேற்றம்—வாழ்வு—வளம் பெறவேண்டுமானால் இது போன்ற பிரசினைகள் யாவற்றையும் அடிப்படை—விஞ்ஞான ரீதியில் ஆய்ந்தெற்றுத் தீர்க்கப்படல் வேண்டுமென்பதை உங்களுக்கு மேலும் எடுத்துக்காட்டவேண்டியது அவசியமில்லையென்றே நினைக்கிறேன். அரசியலியக்கக் காரியங்களில் ஈடுபட்டிருப்போர், அவர்கள் உள்ளபடியே எவ்வளவுதான் தன்னலமற்றுத் தியாகிகளாக இருந்தபோதிலும் இது போன்ற காரியங்களைச் சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்க்கவோ செடியின் நிலைத்து நற்செயல் புரியவோ முன் வாரார். அவர்கள் ஆற்றக்கூடிய காரியங்கள் வேறு. அவர்களது லட்சியங்களனைத்தும் தங்களது சொந்த நலத்தையே மத்தியாக வைத்துச் சுழலக்கூடியவையாகும். நோயாளி ஒருவர் கவலைக்கிடமான நிலையிலிருப்பாரே, அங்கு வரும் மருத்துவர் முதற்கண் ஆரோக்ய நிவாரண மளிக்கக் கூடிய முதல் மருத்துவத்தை மேற்கொள்கிறார் பின்னரே நோய் நாடி, அதன் வாய் நாடி, வாய்ப்பச்செய முயல்கிறார். ஆனால் அரசியலியக்கமொன்றின் வெற்றியும் சிறப்பும், மேற்பூச்சி

வேலைகளில் ஈடுபடுவதால் ஏற்பட்டு விடா.

#### வாழ்வும், தாழ்வும்

மக்கள் சமுதாயத்திடை அவ்வப்போது உதித்தெழும் முற்போக்கு சக்திகளுக்குப் பொருத்த ஆதரவில் நல்லாதரவு வழங்க வேண்டும். பழமை, பழக்கவழக்கம், நம்பிக்கை கடவுள்—மத ஸ்தாபனங்கள், புராதன கொள்கை கோட்பாடுகள் இன்ன பிற நெஞ்சில் முட்கள் — சருக்குக் கவிதைகளால் நசுக்குண்டு, நெரிபட்டுத் தளர்ந்து நடைபட்டு நின்றுபோகும் முன்னேற்ற சக்திகளை ஊக்குவித்து, வைகோதேத்து உயர்த்துவதையே பொறுத்திருக்கிறது அரசியலியக்கமொன்றின் வாழ்வும் வீழ்ச்சியும். இத்தகு புத்துலக சமுதாய— முற்போக்கு சக்திகளின் வலிமையும் வீரபத்தையுமேபொறுத்திருக்கிறது எந்த நாட்டினுடையவும் எதிர்காலமும்.

#### ஒரு நிலை!

ஒரு நாட்டிலே முற்போக்குச் சக்திகள் தழைத்தோங்குவது அந்நாட்டவரின் பழம்கால நிலைமையும், நினைப்பையும் சார்ந்தே யாகும். சில பல நாடுகளின் முற்போக்குச் சக்திகளின் வளர்ச்சி ஆமைவேகத்திலேயே இருக்க முடியும்! அவ்வேகத்தை வெட்டியே அந்நாடுகளின் அவல நிலையும் மறைய மறுத்து, பெருகிப் படர்ந்து வருமென்பது வெளிப்படை. இவ்வண்ணம் முற்போக்கு சக்திகளின் முனைப்புக்கு ஆக்கமும் ஊக்கமுமளிக்காது, அதன் வழி பழமைக்கும் மௌட்டிகத்துக்கும் 'மாக்கு' கூறும் சமுதாயமொன்றின் மக்கள் கூட்டம், வெகு விரைவிலேயே ஒழுக்கச் சீர்கேடுற்று வீழ்ச்சியும் வேதனையுமுறுவரென்பது ஒருதலை.

#### மறுமலர்ச்சிக்கு வழி

வஞ்சகம்—சூது—சூழ்ச்சி—பொறாமை—தடை முதற்றி ஆகியவற்றை எதிர்த்துப்போராட வேண்டிய அவசியம் எந்த அளவுக்குமின்றி, சுதந்தரமாய் வளர்ந்து பெருக ஒரு நாடு முன்னேற்ற சக்திகளுக்கு வாய்ப்பளிக்கு மேல், அந்நாட்டின் அவல நிலை அடியோடியில் தீர்ந்தொழியுமென்பது உறுதி. பிற்தலைட்டம் சத்தாம் சலிகளின்முட்டுக்கட்டைபெறுவுமின்றி முழு சுதந்திரத்துடன் உதித்தெழும் புத்துலக சக்திகள் மக்கள் மன்றத்தின் முன்னர் தலை நிமிர்ந்து நின்று அறிவுலகக் கொள்கை—கோட்பாடுகளை ஆராய்ச்சியுண்மை புதைகளையும் அள்ளி அள்ளி வழங்கி, மக்களிடைப் புத்துணர்விழிப்புச்சியை விரைவில் உண்டாக்கிவிடுகின்றன. இவ்வாறு அந்நாட்டு வரலாற்றில் புதியதொரு ஏடு இடம் பெறுகிறது; பழமை—மௌட்டிகம் தலை சாய்கிறது. மறுமலர்ச்சி மக்களை முத்தமிட வருகிறது.

#### பொறுப்புணர்ச்சி தேவை

அன்பிற் சிறந்த தோழர்களே! இப்படிப்பட்ட மறுமலர்ச்சிவேலைத் திட்டத்தை புன்னடக்கிய மக்கள் மன்றில் பணியாற்ற முன் வந்திருக்கிறது நம் முன்னேற்றக் கழகமென்பதை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். ஆட்சி பீடத்தமர்ந்திருப்போரும், அவர்களுக்கு வால்பிடிப்போரும் நம் கழகத்தின் இத்தகையமகத்தானதிட்ட மேம்பாட்டையும், தொண்டுச் சிறப்பையும் மனதில் வாங்கிக்கொண்டு, வகைாறு கொடுக்க முன்வராவிடினும் வீணான வேண்டாத தொல்லை—தொந்தரை கொடுக்காமலாவது இருந்தால் நாடு மக்களின் பெயரால் அவர்கட்கு நன்றியும், கொடுக்கணக்கும் செலுத்த ஆயத்தமாயுள்ளோம். நாம் மேற்கொண்டிருக்கும் காரியத்தின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உள்ளத்தில் பதியவைத்து, பாருங்-

எந்த விஞ்ஞானியும் எந்த வரலாற்றுத்துறை வல்லுநரும், எந்தக் கல்வித்துறைவித்பன்னரும் கவலைப்படாது, கருத்தில் கொள்ளாத மாபெரும் பணியொன்றில் நாம் இறங்கியிருக்கிறோமென்பதை நினைவில் கொண்டு, இந்நாட்டு வரலாற்றில் புதியதொரு ஏட்டை என் புரட்சிர ஏட்டை இணைக்க நாம் முன்வந்திருக்கிறோமென்பதைநினைவிலிருத்தி, வாழ்வில் மகத்தான மாறுதலொன்றை ஏற்படுத்தி லட்சாதிலட்சம் நடைப்பிணங்களை இந்நாடு மன்னராக்கும் ஈடு எடுப்பற்ற இலட்சியம். சரித்திரம் என்றும் கண்டிரா—இணையில் இலசிட்டப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோமென்பதை எந்த நேரத்திலும் மறக்காமல் பொறுப்பு, கண்ணியம், ஒழுக்கம், கட்டுப்பாடு இன்னபிற இன்றியமையாப்பண்பியல்புகளோடு நடந்து கொள்ள வேண்டும் நம்கழகத் தோழர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நம் எதிரிகள் வலியும் திறனுமிக்கோர். வஞ்சக சூழ்ச்சியும் தெரிந்தோர் எந்த நேரத்திலும் எதுசெய்யவும் இழித்துரைத்து வீழ்த்தப்பார்ப்பர். எனவே நாம் நற்பண்புகளின்கொள் கலன்களாய் நல்லொழுக்க இருக்கைகளாய், பொறுப்புணர்வு பெட்டகங்களாய், பொறுமைக் கலங்கரை விளக்கங்களாய், மக்கள் மெய்மறையினராய்த் திகழ்தல் வேண்டுமென மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

#### எனது கடமை

அறிவிற் சிறந்த தோழர்களே! மாநாட்டைத் துவக்கி வைக்கும் பொறுப்பை என்பாற் சுமத்தினீர்கள். எனது பேச்சில் வெளியிட்ட கருத்துக்கள் சில பல எனது தரத்திற்கு அப்பாற்பட்டனவாயிருக்கலாம். இந்தப் பொறுப்பேற்றதற்காவே சொல்லவேண்டியது கடமை எனக் கருதி இரண்டொன்று கூறியிருப்பேன் பொறுத்தருள்க.

வணக்கம்

வாழ்க தன்மானம்!

வெல்க பகுத்தறிவு!!

## உற்பத்தியைப் பெருக்க புதிய கருவி

லண்டன், மார்ச். 13—

எஞ்ஜினியரிங்துறையில் புரட்சிகரமான மாறுதல்களைச் செய்யக்கூடிய ஒரு நவீன கருவியை லங்காஷயர் விஞ்ஞானி ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். அதைப் பெறுவதற்கு அமெரிக்கர்களும் இதர அயல்நாட்டினரும் போட்டி காட்டுகின்றனர்.

இதன் விலை ரூ 260 என்றும், எந்த இயந்திரத்தையும் குறிப்பிட்ட வேகத்தில் ஓடச்செய்ய இதனால் கட்டுப்படுத்த முடியும் என்றும், வேண்டுமென்றால் எந்த இயந்திரத்தையும் வேகமாக ஓட்டச்செய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது.

இதன்மூலம் உற்பத்தியை 10சத விகிதம் முதல் 15 சத விகிதம்வரை அதிகரிக்க முடியுமாம். இது பிரிட்டிஷ் கைத்தொழில் கண்காட்சியில் வேலை செய்து காட்டப்படுமாம்.

இதைக் கண்டுபிடித்தவர் பெயர் ஜான்பிளேக் என்பதாம். அவர் நார்வேயிக்கு விடுமுறைக்காகச் சென்ற பொழுது இதைக்கண்டுபிடித்திருக்கிறார்.

## இத்தாலியில் பண்ணையாட்கள் புரட்சி

ரோம், மார்ச். 10—

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பண்ணையாட்கள் அதிக அளவில் நிலம் வைத்துள்ள தனிப்பட்டோரின் நிலத்தைப் பலாத்காரமாக் கைப்பற்றிக்கொண்டு வருகின்றார்கள்.

இப்ரெவிசா என்னுமிடத்தில் நிலச் சொந்தக்காரர்கள் கூட்டத்தைப் பண்ணையாட்கள் தாக்கியதால் பலர் காயப்படுத்தப் பட்டார்கள்.

## புது ரக அரிசி

இந்திய விவசாய ஆராய்ச்சி சபை திருவாங்கூரில் நடத்திவந்த நெல் ஆராய்ச்சித் திட்டத்தின் பலனாக 16%லிருந்து 32% வரை அதிகம் மகசூல் கொடுக்கக்கூடிய புதியதாக அரிசி ரகங்கள் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சிகள் திருவாங்கூரில் மோன்கொம்பு, ஆதூர் ஆகிய இரு விடங்களிலுமுள்ள நெற்பயிர் வளர்ப்பு ஸ்தலங்களில் 1940 முதல், நடத்தப்பட்டுவருகின்றன. இப்பொழுது வெளியிடப்பட்டுள்ள இத்தத் திட்டத்தின் இறுதி அறிக்கையில், பின் வரும் புதாக அரிசிகள் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

அ. "எம். ஒ. 1," இந்த ரகம் குத்தப் பகுதியில் சாதாரணமாகப் பயிர் செய்யப்படும் 'செட்டிவிரிப்பு' என்ற ரகத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. பரீட்சார்த்தமாகப் பயிர் செய்த பார்த்ததில் மகசூல் 30 சதவிகிதம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இந்த ரக நெல் சேலம் ஜில்லாவில் நன்கு விளைகிறது. இந்தப்பயிர் 99 நாட்களில் பலன் கொடுக்கிறது; ஏகாவுக்கு 1,800 பவுண்டு மகசூல் கிடைக்கிறது.

ஆ. "எம். ஒ 2." இந்த ரகம் உள்ளூரில் மிகப் பிரபலமாக விளங்கும் கன்னட சம்பா 'என்ற ரகத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. மகசூல் அதிகப்படியாக 2௦ சதவிகிதம் கிடைக்கிறது; இந்தப் பயிர் 95 நாட்களில் பலன் கொடுக்கிறது இந்த ஏகருக்கு சராசரி 2000 மகசூல் கிடைக்கிறது.

இ. பி. டி. பூ. 16. இந்த ரகத்தைப் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்து பார்த்ததில், மகசூல் 20 சதவிகிதம் அதிகப்படியாகக் கிடைப்பதாகவும், ஏகருக்கு சராசரி 1300 பவுண்ட் மகசூல் கிடைப்பதாகவும் தெரியவந்தது.

ஆதூருள்ள ஆராய்ச்சி ஸ்தலத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பல புதிய ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை 16 முதல் 32 சத விகிதம் வரை அதிகப்படி மகசூல் கொடுக்கின்றன.

திருவாங்கூரில், நீர்ப்பாசன வசதியுள்ள சில பிரதேசங்களில் மும்போகம் சாகுபடி செய்யமுடியுமென்றும் இந்த ஆராய்ச்சிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. "பி. டி. பி. 10" இந்தப் பிரதேசங்களில் ஜனவரி முதல் மார்ச் வரை நன்றாக விளைவதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இந்த ரக நெற் பயிரை சாகுபடி செய்வதன் மூலம், இந்தப் பிரதேசத்தில் தானிய உற்பத்தி சுமார் 50 சத விகிதம் அதிகரிக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

தானிய வித்துக்களை அபிவிருத்தி செய்வதோடு கூடவே, விதைகளை ஏராளமாக உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. 'ஏ—வகுப்பு" விவசாயிகளுக்கு, விதை உற்பத்திக்காக, சுத்தமாக விதைகள் விநியோகிக்கப்பட்டன. இவர்கள் உற்பத்திசெய்த விதைகள், சாகுபடிக்காக "பி—வகுப்பு" விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டன. எம். ஒ—1, எம். ஒ. 2,' பி.டி.பி—10 ஆகிய ரகங்களின் விதைகள் மொத்தம் சுமார் 33, 352 பவுண்ட் இதுவரை விவசாயிகளுக்கு விநியோகிக்கப் பட்டிருக்கிறது. அடுத்த சாகுபடி காலத்தில் விநியோகிப்பதற்காக ஏராளமான விதை கையிருப்பில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## 10 என்ஜின் உள்ள விமானங்கள்

லண்டன், மார்ச். 13—

10 என்ஜின் உள்ள மூன்று விமானங்கள் பிரிட்டனில் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. இதில் 105 பிரயாணிகள் தங்கலாம். சுமார் 5 000 மைல் வரை ஒரே மூச்சில் மணிக்கு 385 மைல் வேகத்தில் பறந்து இவைகளால் முடியுமாம்.

# குறிஞ்சிபாடியில் மாநாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நெடுஞ்செழியன், பூ. கணேசன் ஆகிய தோழர்கள் தங்கள் வாழ்நாளைத் திராவிடத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுவதை லட்சியமாகக் கொண்டு உழைப்பதைப் பாராட்டி, அவர்கள் முறையே மாநாட்டுக்குத் தலைமை தாங்கவும், துவக்கிவைக்கவும் பூரண தகுதி வாய்ந்தவர்களென்றும், மாநாட்டின் அவசியத்தைக் குறித்தும், இன்றைய அரசியல் நிலைமைக் குறித்தும் அழகாகப் பேசினார்.

தோழர் கணேசன் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் மாநாட்டுக்கு வர இயலாததால், அவருடைய துவக்கவிழாப் பேச்சைத் தோழர் இளம்வழுதி வாசித்தார்.

அடுத்தபடியாக தோழர் இளம்வழுதி முன்மொழியவும் விருத்தாசலம் முனுசாமி பின்மொழியவும் தோழர் நெடுஞ்செழியன் மாநாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் நெடுஞ்செழியன் ஒரு மணி நேரம் தம்தலைமைச் சொற்பொழிவை நிகழ்த்தினார். (பேச்சு பின்னர்வரும்)

மாநாடு ஒன்றரை மணிக்கு பகல் உணவுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

பிற்பகலில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. முதலில் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

1. வைத்திய வள்ளல் பெரியார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் மறைவுக்கு இம்மாநாடு வருத்தத்தையும், அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

2. இடதுசாரி தலைவரும் வங்க வீரருமான சரத் சந்திர போஸ் அவர்கள் மறைவுக்கு, இம்மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

3. கல்விப்பணிக்குத் தன் முழுச் சொத்தையும் ஈந்த காஞ்சி வள்ளல் கந்தசாமி அவர்கள் மறைவுக்கு இம்மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தை அவருடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறது.

அனுதாபத் தீர்மானங்கள் மாநாட்டுத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் படிக்கப்பட்டு, மௌனத்துடன் நிறைவேற்றப்பட்டன.

4. அண்மையில் சேலம் சிறையில் துப்பாக்கித்துரைத்தனம் நடத்தி, கம்யூனிஸ்ட் கைதிகளில் 22 பேரைக் கொன்று, பலரைப் படுகாயப்படுத்தி நிலவிய நிலையைக் கண்டு இம்மாநாடு வருந்துவதுடன், தக்க பரிகாரம் தேடித்தராத அரசாங்கத்தின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

முன்மொழிந்தவர்: கலாமணி
வழிமொழிந்தவர்: கலைமணி

5. பலாத்கார நடவடிக்கையில் ஈடுபடும் கட்சிகளின் போக்கை இம்மாநாடு கண்டிப்பதுடன், குழப்பமில்லாத அமைதியான சூழ்நிலையை நாட்டில் உண்டாக்கும்படி எல்லாக் கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறது.

முன்: திருநாவுக்கரசு; வழி: சாமிநாதன்.

6. விவசாய அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்ட விவசாய இலாகா, விவசாய முன்னேற்றத்திற்காக பாடுபடாமல் லாபநோக்கம் கொண்டு வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் போக்கை, இம்மாநாடு கண்டிப்பதுடன், தகுந்த நடவடிக்கை எடுத்து விவசாய இலாகாவை விவசாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடும்படி செய்ய வேண்டுமாய் அரசாங்கத்தைக் கேட்கொள்கிறது.

முன்: இராம. பழனிச்சாமி; வழி: இரா. சொக்கலிங்கம்.

7. தென்னாற்காடு மாவட்டத்தில் பெருவாரியான லுங்கி கைத்தறி நெசவாளர்கள் போதிய வேலையோ, போதிய வருவாயோ கிடைக்காமல் அல்லல்படும் அவல நிலையை மாற்றி, அந்தப் பரிதாபகரமான பாட்டாளி மக்களுக்கு நல்ல நிலைமையில் வாழ வழிவகை செய்து தருமாறு இம்மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

முன்: ஆ. த. சுப்ரமணியம். வழி: நாராயணசாமி.

8. குறிஞ்சிப்பாடி மாவட்டத்திலுள்ள ராசாகுப்பம் முதலிய ஊர்களுக்கும் குறிப்பாக சேரிகளுக்கும் பொதுவான குளம் படிக்கட்டு இல்லாமல் பாழ்பட்டு வரும் நிலையை மாற்றி, அந்தக் கிராம மக்களுக்கு நல்ல குளம் கட்டித் தருமாறு அரசாங்கத்தையும், ஜில்லா போர்டையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது."

முன்: பழனியப்பன்.
வழி: இளங்கோவன்.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின், பொன்மலை பராங்குசம் அவர்கள் தொழிலாளர் நிலைபற்றின தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் பேசினார். நெசவுத் தொழிலாளர்கள் மட்டுமல்லாமல் ஆலைத் தொழிலாளர்கள், ரயில தொழிலாளர்கள் ஆகிய எல்லோரும் மிகவும் தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்களென்றும், பர்மாவில் அந்நாட்டு அரசாங்கத்தின் கட்டுதிட்டங்களைச் சமாளிக்காமல், இந்தியாவிலிருந்து சென்ற தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்களென்றும், அரசாங்கம் இதற்காக நடவடிக்கை யொன்றும் எடுத்துக்கொள்ளவில்லை யென்றும் அவர் கண்டித்துப் பேசினார். மற்றும் திராவிட நாட்டை வடநாட்டினர் சுரண்டுவதால் ஏற்பட்டுள்ள நிலையால் தொழிலாளர் நிலை மிகக் கேவலமடைந்துள்ளதென்று அவர் குறிப்பிட்டார்.

தோழர் இராம. அரங்கண்ணல் அடுத்து விவசாயிகள் நிலையைப் பற்றிப் பேசுகையில், விவசாயிகள் பண்ணையாட்கள், மிராசுதாரர்கள், பண்ணைச் சொந்தக்காரர்கள் என முப்பிரிவினரென்றும், இவர்களில் அதிகக் கஷ்டப்படுபவர்கள் உழைப்பிலேயே நம்பிக்கை வைத்துள்ள பண்ணையாட்கள்தானென்று கூறினார்.

விவசாய இலாகா கூட பண்ணையாட்களுக்குத்தான் அதிகச் சலுகைகள் காட்டுகின்றனவென்று அவர் பேசினார்.

தோழர் ஜி. பி. சோமசுந்தரம் பேசுகையில் குடியானவர்களிடமிருந்து வற்புறுத்திப் பணம் பறிக்கப்படுகிறதே தவிர அவர்களுக்குச் சௌகரியங்களை துவும் செய்துகொடுக்கப்படவில்லையென்றும், விவசாய இலாகா வீணுக்குத்தான் இருக்கிறதென்றும் அதனால் விவசாயிகளுக்கு அதிகநன்மை இல்லையென்றும் கூறினார். அரசாங்கத்தின் வருமானத்தின் பெரும்பகுதி சம்பளங்களாகவே செலவிடப்படுகிறதென்றும், இது தவிர்க்கப்பட வேண்டுமென்றும்கூறினார்.

திருக்குறளின் சிறப்புப் பற்றித் திருக்குறள் முனுசாமி சிறிதுநேரம் பேசினார்.

சேலம் சித்தையன் அவர்கள் பேசுகையில், தேய்ந்து போய்க்கொண்டிருக்கும் காங்கிரஸ் தன்னை எப்படி வளர்த்துக்கொள்வது என்பது பற்றித் தீவிரமாக வேலை செய்து வருகிறதென்று கூறினார். சமீபத்தில் சென்னையில் கூட்டப்பட்ட அரசியல் மாநாட்டின் தலைவரின் முக்கியப்பேச்சு தி. மு. கழகத்தினரை ஒழித்துக் கட்ட வேண்டுமென்ற நோக்கத்தோடு அமைந்துள்ளது. அதுவுமன்றி தோழர் அண்ணாத்துரை பேசும்போது காந்தியாருக்கு கூடுவதுபோல் கூடிவிடுகிறார்களே, அறிவு படைத்தவர்கள் அங்கு குவிய, நம் காங்கிரஸ் தொண்டர்கள் தியாகம் செய்ததற்கு நிலத்திற்காகப் போட்டி போடுகிறார்களே என்று காங்கிரஸ்காரர்கள் வருந்துகிறார்கள். சேலம் சம்பவம் போன்று இதுவரை நடந்ததில்லை; டையர்கூட ஆளைப் பார்த்துச் சுடுவதற்குமுன் பயமுறுத்தத் துப்பாக்கியை மேலே சுட்டான்; அதைவிடக் கேவலமாகக் காங்கிரஸ் நடந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் பலாத்காரத்தில் ஈடுபட்டதில்லை, ஆதரித்ததுமில்லை, காங்கிரஸ், வரலாற்றை மறந்துவிட்டது. அடக்குமுறைபாட்சி வீழ்ந்துவிடுமென்று நமக்கு வரலாறு கூறுகிறது.

இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கும் ஜவுளிக்கொள்கை காரணமாக பிரதேசத்துக்குத் தகுந்தபடி நூல் கிடைப்பதில்லை. இதுமட்டுமல்லாமல் கொடுக்கும் நூல் பற்றவில்லை, ஆகையால் 5 லக்ஷம் குடும்பங்கள் பசியுடன் வாடுகின்ற இந்நிலையைத்தவிர்க்கவேண்டுமானால், திராவிட இனம் ஒன்றுபட்டு வாழவேண்டுமென்று தோழர் சித்தையன் கூறி முடித்தார்.

தோழர் என். வி. நடராசன் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது ஒவ்வொரு ஊரிலும் ஏராளமான மக்கள் வந்து கூடினார்களென்றும், அரசாங்கத்தின் மீது ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள வெறுப்பே இதற்குக் காரணமென்று அறிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், மந்திரிசபையின் மீதுள்ள குற்றச்சாட்டால் அந்நிய நாட்டினர் கூடத் தன்னை அதைப் பற்றிக் கேட்டார்களென்று சர். எல். முதலியார் பேசுகையில் அறிவித்துள்ளாரென்றும், திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசுக்கு எதிராகப்போட்டியிட்டு பதவியைக் கைப்பற்றிக் கொள்ள முயலாதென்றும், வங்க சிங்கங்களைப் போன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்றும் தலை வணங்காமல் இருப்பார்களென்றும் அவர் பேசி முடித்தார். இறுதியாகப் பொதுச்செயலாளர் தோழர் அண்ணாத்துரை அவர்கள் சுமார் 1-30 மணி நேரம் பேசினார்.

இரவு 9-30 மணிக்குசி. என். ஏ. குழுவினரின் 'சந்திரமோகன்' நாடகம் நடிக்கப்பட்டது. நாடகத்தைக்காண பல ஊர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்து கூடியிருந்தனர். நாடகம் இரவு 2 மணிக்கு முடிவுற்றது.

(ந நி.)


சுதந்தர பாரதம் சொர்ண பூமியாக

## தேசீய சேமிப்பு வாரம்

மார்ச் 12 முதல் 18 வரை கொண்டாடுங்கள்

காடு கழனியாக பஞ்சம் பறந்தோட ★ காசு பணமாக பணம் நிதியாக

ஒரே வழி

நேஷனல் சேவிங்ஸ் சேர்டிபிகேட்டில் பணம் போடுவதுதான்.

அந்த நல்ல வழக்கத்தை இந்த வாரத்தில் தொடங்குங்கள்

மாகாண தேசீய சேமிப்பு அதிகாரி,
சென்னை—6.


## இருதய நோய்களைப் போக்க ஆராய்ச்சி

நியூயார்க், மார்ச். 13—

அணுசக்தி ஆராய்ச்சி விஷயமாக வேலை செய்துவரும் விஞ்ஞானிகள் ஹிருதய நோய்களைக் குணமாக்கும் வழிகள் சிலவற்றைக் கண்டுபிடித்திருப்பதாக தெரியவருகிறது.

இந்த அணுசக்தி கமிஷனின் ஆட்டின் சேர்மன் கூறுகையில், எதனால் ஹிருதயநோய்கள் ஏற்படுகின்றன என்ற விஷயமாக ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கின்றன வென்றும் முக்யமாக இந்த ஆராய்ச்சிகள் காலிபோர்னியா சர்வகலாசாலையில் நடைபெற்றதென்றும் அவர் கூறினார்.

இந்த ஆராய்ச்சிகள் முதலில் முயல்களைக்கொண்டு செய்து பார்க்கப்பட்டதாம். இதே முறைகளை மனிதர்கள் விஷயத்திலும் உபயோகிக்கலாமா என்பது இன்னும் ஆராய்ச்சி செய்யப்பட்டுவருகிறதாம்.

## கம்பளம் டாலர் சம்பாதிக்கிறது!

லண்டன், மார்ச். 13—

சென்ற ஆண்டில் பிரிட்டன் கம்பளங்களை அதிகம் டாலர் பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறதென்றும், பிரிட்டனில் அதிகம் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் வரிசையில் கம்பளம் ஐந்தாவது இடத்தைப் பெறுகிறது என்றும் கூறப்படுகிறது.

## தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

## வீரசோழம்

வீரசோழம், மிச். 28—

25-3-50 இரவு 8-மணிக்கு கழகக் காரியாலயத்திற்கு முன்புள்ள மைதானத்தில் அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தலைமையின்கீழ் துவக்க விழா ஆரம்பமாயிற்று. இயக்கத் தோழர்கள் பாட்டுப்பாடி இசைத்தனர். மாணவர்கள் முகம்மது சிக்கந்தர், முகம்மது ஈசா, இருவரும் "திராவிடர்களின் கல்வி இன்மையால் வருங்கேடுகள்" பற்றி விரிவாகப் பேசினர். பின்பு மண்டல மாணிக்கம் தோழர் சுப்பிரமணியம் அவர்களும், வீரசோழம் தோழர் எம். இஸ்மாயில் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள் பற்றிப் பேசினர். கடைசியில் அருப்புக்கோட்டை தோழர் 'இள. சி' ஆகிய, இராச. தங்கப்பழம் அவர்கள் இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். இறுதியாகப் பேசிய தலைவர் தமது முடிவுரையில் புதிய அரசியலமைப்பில் உள்ள ஏகாதிபத்யத் தன்மையை விளக்கிவிட்டு சேலம் சிறையில் நடந்த படுகொலையும் பற்றிக் கண்டித்தும் பேசினர். இரவு 12-30-மணிக்குத் தோழர் பி. கே. எஸ். காட்டுவா மைதீன் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. அச்சிறிய கிராமத்தில் 2000 மக்களுக்கு மேல் ஆடவரும் பெண்டிருமாகக் கூடியிருந்தனர்.


இராசீபுரத்தில் நமது விற்பனையாளர்

கே. அங்கமுத்து
பிரபாத் நியூஸ் மார்ட்
ஆத்தூர் ரோடு
இராசீபுரம்

நிர்வாகி 'மாலைமணி'


Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1